**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 73/2023**
**PW1**

| | | |
|---|---|---|
| Name | : | மகேஸ்வரி |
| Father's/Husband's Name | : | பாடலி |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.06.2025.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது சேத்துபட்டில் குடியிருந்து வருகிறேன். நானும் என் கணவரும் பாத்திரக்கடை மற்றும் அடகுகடை வைத்துள்ளோம் . ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எங்கள் கடையில் எதிரி தனது கைப்பேசியை அடமானம் வைத்தவகையில் அவரை எனக்கு தெரியும். கடந்த 13.09.2022 அன்று பழம்பேட்டை வெங்கடாசலம் தெருவை சேர்ந்த ஆஜர் எதிரி எங்கள் கடையில்தனது செல்போன் அடகு வைத்தார். 18.09.2022 அன்று மாலை 3 மணியளவில் கடைக்கு வந்து ரசீது கொண்டுவராமல் செல்போனை திருப்பி கொடுக்குமாறு என் மாமனார் ராஜகோபால் செட்டியாரிடம் கேட்டார். அதற்கு என் மாமனார் அடகு ரசீது எடுத்து வருமாறு திருப்பி அனுப்பி விட்டார். எதிரி கடையில் இருந்து சென்றுவிட்டு, 5 நிமிடம் கழித்து வந்து என் மாமனாரிடம் ரூ . 1200 கொடுத்தார். என் மானமார் அதை வாங்க மறுத்துவிட்டு மீண்டும் அடகு ரசீதை எடுத்து வருமாறு சொன்னார் . ரசீது தொலைந்து போயிருந்தால் ஆதார் அட்டை நகல் எடுத்து வரச்சொன்னார். 5 நிமிடம் கழித்து ஆதார் அட்டை நகலும், பணம் ரூ. 1200/- எடுத்துக்கொண்டு வந்தார். அதை என் மாமனார் பெற்றுக்கொண்டு எதிரியிடம் கைப்பேசியை திருப்பிக் கொடுத்து

விட்டார். அதை வாங்கிக்கொண்ட எதிரி என் மாமனாரின் சட்டையை பிடித்து " ரசீது கொடுக்கலன்னா பொருள் கொடுக்க மாட்டியாடா தெவிடியா பையா " என்று திட்டி ஓங்கி முகத்தில் ஒரு குத்து குத்தினார் . என் மாமனாரின் தலையை பிடித்து சுவற்றில் ஓங்கி மோதினார் . என் மாமனாரின் தலையிலும், முகத்திலும் அடிபட்டு மூக்கில் ரத்தம் வடிந்தது . எதிரி அங்கிருந்து அவருடைய இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார். என் மாமனார் ரத்தக்காயங்களுடன் அங்கேயே உட்கார்ந்து விட்டார். கடையில் அப்போது வேலை பார்க்கும் சரண்யா என்ற பெண்ணும் இருந்தார். பொருட்கள் வாங்க வந்த ராஜமாணிக்கம், சங்கீதா ஆகியோரும் ஆங்கு இருந்தார்கள். நானும் என் கணவரும் என் மாமனாரை சேத்துப்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் . மருத்துவர்கள் அங்கு ஸ்கேன் வசதி இல்லாததால் திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு செல்லுமமாறு அறிவுறுத்தினார்கள். நாங்கள் உடனே சென்னை கேளம்பாக்கத்தில் உள்ள செட்டிநாடு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் . அங்கு 7 நாட்கள் சிகிச்சை பெற்று வந்தார். 25.09.2022 அன்று இரவு 10 மணிக்கு சேத்துபட்டு காவல் நிலையத்திற்கு வந்து நான் புகார் கொடுத்தேன் . என்னிடம் காட்டப்படுவது நான் கொடுத்த புகார். அது **அ.சா.ஆ.1.**

பின்னர் 26.09.2022 அன்று இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். செட்டிநாடு மருத்துவமனையில் இருந்து 03.10.2022 அன்று என் மாமனாரை சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் . 04.10.2022 அன்று மதியம் 3 மணியளவில் என் மாமனார் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். 05.10.2022 அன்று பிரேத பரிசோதனை செய்துவிட்டு பிரேதத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள். அன்றைய தினமேஎங்களை போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துகொண்டார்கள்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யவில்லை.**

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.